ZURICH

**இணைப்பு 2**
**<UDR திட்டம்> -க்கான காப்பீட்டுக் கட்டணங்கள் திருத்தம்**
**அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQ-கள்)**

| எண் | கேள்விகள் | பதில்கள் |
|---|---|---|
| 1. | **ஏன் எனது காப்பீட்டுக் கட்டணங்களைத் திருத்துகிறீர்கள்?** | மலேசியாவில் மருத்துவ மற்றும் சுகாதாரக் கவனிப்புச் செலவுகள் அதிகரித்து வருவது ஒரு வளர்ந்து வரும் கவலையாக உள்ளது என்பதை நாங்கள் புரிந்து கொள்கிறோம். தொற்றா நோய்களின் அதிகரிப்பு, தனியார் சுகாதாரச் சேவைகளின் விரிவாக்கம் மற்றும் தொடர்ந்து மருத்துவ பணவீக்கம் அதிகரிப்பது போன்ற பல குறிப்பிடத்தக்க போக்குகள் மருத்துவ மற்றும் சுகாதாரத் துறையைப் பெரிதும் பாதித்துள்ளன.<br><br>அதன் விளைவாக, காப்பீட்டு இழப்பீடு கோரும் எண்ணிக்கையும், செலவும் அதிகரித்துள்ளது. வெறும் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு 1,000 காப்பீடு செய்யப்பட்டவர்களுக்கு 76 இழப்பீடு கிளைம்கள் மட்டுமே வழங்கப்பட்ட நிலையில், 1,000 பேருக்கு 84 இழப்பீடு கிளைம்களாக அதிகரித்துள்ளது. ஜனவரி 1, 2019 முதல் டிசம்பர் 31, 2022 வரையிலான காலகட்டத்தில் சராசரி இழப்பீடு கிளைம் தொகை RM7,167 இலிருந்து RM9,617 ஆக அதிகரித்துள்ளது. மேக்ஸ்மெடிக்கின் இழப்பீடு கிளைம், வெவ்வேறு வயதுப் பிரிவுகளில் வெவ்வேறு அளவு அதிகரிப்புடன், ஆண்டுக்கு சராசரியாக 10.3% அதிகரித்துள்ளது.<br><br>பின்வரும் காரணிகளால் அதிகரித்து வரும் மருத்துவச் செலவுகளையும், அதிகரித்து வரும் மருத்துவ கிளைம்களையும் கையாள்வதற்கு, இந்தத் திருத்தம் அவசியமாகும்:<br>• மருந்துகள் மற்றும் சிகிச்சைக்கான செலவு அதிகரிப்பு<br>• புதிய மருத்துவ தொழில்நுட்பங்கள், மருந்துகள் மற்றும் உபகரணங்களுக்கு மாறுதல்<br>• உடல்நல ஆபத்துகள் அதிகரித்து, நீண்ட கால கவனிப்பு தேவைப்படுகின்ற நீரிழிவு, அதிக கொழுப்பு மற்றும் உடல் பருமன் போன்ற நாட்பட்ட நோய்கள் அதிகரிக்கின்ற வகையிலான வாழ்க்கை முறை மாற்றம்<br>• சிறந்த மருத்துவ பராமரிப்புக்கான தேவை அதிகரிப்பு.<br><br>ஜூரிச் லைஃப் இன்சூரன்ஸ் மலேசியா பெர்ஹத்தில், உங்களுக்குத் தேவைப்படும் போதெல்லாம் மருத்துவச் சேவைகளும், சிகிச்சைகளும் உங்களுக்குக் கிடைப்பதை உறுதிப்படுத்த நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். |
| 2. | **எனது காப்பீட்டுக் கட்டணங்களைத் திருத்துவதற்கான அளவுகோலை எவ்வாறு தீர்மானிக்கிறீர்கள்?** | திருத்தத்தைத் தீர்மானிப்பதில், உண்மையான மருத்துவச் செலவுகள், தற்போதைய மருத்துவப் பணவீக்கம் மற்றும் வாடிக்கையாளரின் பொருளாதார நிலை போன்ற பல்வேறு காரணிகளை நாங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்கிறோம். உங்கள் காப்பீட்டுக் கட்டணங்கள் எவ்வளவு உயரும் என்பது, உங்கள் வயது, தொழில், பாலினம் மற்றும் நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள குறிப்பிட்ட திட்டத்தைப் பொறுத்ததாகும். |
| 3. | **நான் எந்தவொரு கிளைமும் செய்யாத போது எனது காப்பீட்டுக் கட்டணத்தில் ஏன்** | மருத்துவக் காப்பீடு என்பது, காப்பீட்டுக் கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு, கிளைம்களுக்குப் பணம் செலுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் ஆபத்து-பகிர்வு என்ற அடிப்படையில் செயல்படுகிறது. அதன் காரணமாக, இதற்கு முன்பு நீங்கள் |

| | | |
|---|---|---|
| | **திருத்தம் செய்யப்பட்டுள்ளது?** | ஏதேனும் கிளைம் செய்திருந்தாலும் இல்லாவிட்டாலும், அனைத்துப் பாலிசிகளும் பாதிக்கப்படும். |
| 4. | **எப்போது எனது திருத்தப்பட்ட காப்பீட்டுக் கட்டணங்கள் நடைமுறைக்கு வரும்?** | உங்கள் அறிவிப்புக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, உங்கள் அடுத்த பாலிசி வருடாந்திரத் தேதியில் புதிய காப்பீட்டுக் கட்டணங்கள் நடைமுறைக்கு வரும். |
| 5. | **பிரீமியம்களுக்கும் காப்பீட்டு கட்டணங்களுக்கும் இடையே உள்ள வித்தியாசம் என்ன?** | <u>**பிரீமியம்கள்**</u><br><br>பிரீமியம்கள் என்பவை, உங்கள் காப்பீட்டு கவரேஜுக்காக நீங்கள் ஜூரிச்சிற்குச் செலுத்தும் தொகையாகும். முதலீட்டுடன் இணைக்கப்பட்ட காப்பீட்டு பாலியைப் பொறுத்த வரையில், தேர்ந்தெடுக்கப்பட்ட முதலீட்டுடன் இணைக்கப்பட்ட ஃபண்டு (களின்) யூனிட்களை வாங்குவதற்காக, நீங்கள் செலுத்தும் பிரீமியம்களின் ஒரு பகுதியோ அல்லது அனைத்துமோ பயன்படுத்தப்படும், மீதமுள்ள தொகையானது, காப்பீட்டுச் செலவுகளுக்கும், நேரடி விநியோகச் செலவுகளுக்கும் முன்கூட்டிய கட்டணங்களைச் செலுத்துவதற்குப் பயன்படுத்தப்படும்.<br><br><u>**காப்பீட்டுக் கட்டணங்கள்**</u><br><br>உங்கள் காப்பீட்டுத் கவரேஜுக்குச் செலுத்துவதற்காக, உங்கள் முதலீட்டுடன் இணைக்கப்பட்ட பாலிசியின் ஃபண்டு மதிப்பிலிருந்து மாதந்தோறும் காப்பீட்டுக் கட்டணங்கள் கழிக்கப்படும். ஒவ்வொரு வருடமும் உங்கள் வயது அதிகரிப்பதால், காப்பீட்டுக் கட்டணமும் அதிகரிக்கும். |
| 6. | **திருத்தத்திற்குப் பிறகு நான் வேறு ஒரு பிரீமியம் தொகையைச் செலுத்த வேண்டுமா?** | பிந்தைய ஆண்டுகளில் உங்கள் காப்பீட்டுக் கட்டணங்களைச் செலுத்தும் அளவிற்கு உங்கள் முதலீட்டுடன் இணைக்கப்பட்ட பாலிசியின் ஃபண்டு மதிப்பு போதுமானதாக இருக்காது. அதனால், முதிர்வு காலம் வரை உங்கள் பாலிசி நீடிப்பதை உறுதிப்படுத்துவதற்காக, அவ்வப்போது உங்கள் பிரீமியத்தை மதிப்பாய்வு செய்யுமாறு வலியுறுத்துகிறோம். |
| 7. | **எனது பாலிசியின் ஃபண்டு மதிப்பைப் பாதிக்கக் கூடிய காரணிகள் எவை?** | உங்கள் பாலிசியின் ஃபண்டு மதிப்பு உங்கள் பாலிசி நீடித்திருக்கும் அளவிற்குப் போதுமானதாக இல்லாமல் இருப்பதற்கு காரணமாகப் பின்வருபவை இருக்கலாம்:<br><br>• பிரீமியம் செலுத்துவதை இடையில் நிறுத்தி வைப்பது<br>• சாதகமற்ற முதலீட்டு வருவாய் அனுபவம்<br>• காப்பீட்டுச் செலவு மற்றும்/அல்லது பிற கட்டணங்களில் செய்யப்படும் திருத்தம்<br>• ரைடர் (களை) சேர்ப்பது<br>• பகுதியளவு அல்லது முன்கூட்டியே பணம் எடுத்தல்<br>• காப்பீட்டு கவரேஜில் அதிகரிப்பு |
| 8. | **பாலிசியுடன் பிரீமியம் தள்ளுபடி ரைடர் இணைக்கப்பட்டிருந்தால், உறுதியளிக்கப்பட்ட** | உங்கள் பிரீமியமானது, வழக்கமான அடிப்படை பிரீமியம் மற்றும் வழக்கமான டாப் அப் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. உங்கள் தள்ளுபடி ரைடர் வழக்கமான டாப்-அப்களை ஈடுகட்டினால், டாப்-அப் தொகையுடன் சேர்த்து தள்ளுபடி உறுதி செய்யப்பட்ட |

| | | |
|---|---|---|
| | **தள்ளுபடித் தொகையும் அதிகரிக்குமா?** | தொகையும் அதிகரிக்கும். இருப்பினும், அது டாப்-அப்களை ஈடுகட்டவில்லை என்றால், உங்கள் தள்ளுபடி உறுதி செய்யப்பட்ட தொகை மாறாமல் அப்படியே இருக்கும். |
| 9. | **எனது பாலிசி தள்ளுபடி நிலையில் இருந்தால் (பிரீமியம் பேமெண்ட்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது), நான் ஒற்றை பிரீமியம் டாப்-அப்பிற்குப் பணம் செலுத்த வேண்டுமா?** | ஆம். உங்கள் பிரீமியம் தள்ளுபடி மாறாமல் இருந்தாலும், உங்கள் பாலிசி ஆண்டில் காப்பீட்டுக் கட்டணங்கள் அதிகரிக்கும். இது காலப்போக்கில் உங்கள் ஃபண்டு மதிப்பைக் குறைக்கலாம்.<br><br>உங்கள் பாலிசி நிலைத்திருப்பதை உறுதிசெய்ய, அதிகரித்த காப்பீட்டு கட்டணங்களை ஈடுகட்ட பரிந்துரைக்கப்பட்ட ஒற்றை பிரீமியம் டாப்-அப்பைச் செலுத்துமாறு நாங்கள் உங்களுக்கு வலுவாகப் பரிந்துரைக்கிறோம். |
| 10 | **வருங்காலத்தில் மற்றொரு திருத்தம் செய்யப்படுமா?** | மருத்துவச் செலவுகளுக்கான எங்கள் மருத்துவத் திட்டங்களைத் தொடர்ந்து நாங்கள் மதிப்பாய்வு செய்து, எங்கள் மருத்துவமனை கூட்டாளர்களுடன் சேர்ந்து மருத்துவச் செலவுகளை சுறுசுறுப்பாகக் கையாள்வதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கிறோம். எதிர்காலத்தில் திருத்தங்கள் தேவைப்பட்டால், அதை உங்களுக்குத் தெரிவிப்போம். |
| 11 | **சற்று முன்பு தான் எனது வருடாந்திர அறிக்கை கிடைத்தது. இப்போது பல்வேறு பரிந்துரைக்கப்பட்ட பிரீமியங்கள் குறித்து ஆலோசனை வழங்கும் காப்பீட்டு கட்டணத் திருத்தக் கடிதத்தைப் பெற்றுள்ளேன். எந்தக் கடிதத்தை நான் பார்க்க வேண்டும்?** | காப்பீட்டு கட்டணத் திருத்தக் கடிதத்திற்கு முன்னதாக வருடாந்திர அறிக்கை உங்களுக்குக் கிடைத்திருந்தால், காப்பீட்டுக் கட்டணத் திருத்தக் கடிதத்தில் பரிந்துரைக்கப்பட்ட பிரீமியங்களை (பொருந்தினால்) நீங்கள் பரிசீலிக்கலாம். பரிந்துரைக்கப்பட்ட புதிய வழக்கமான பிரீமியத்தை விட அதிகமாகச் செலுத்தி, ஒற்றை பிரீமியம் டாப்-அப் (பொருந்தினால்) செய்யுமாறு நாங்கள் உங்களுக்கு அறிவுறுத்துகிறோம். அதன் மூலம் உங்கள் பாலிசி நீண்ட காலத்திற்கு அதிகக் காப்பீட்டுக் கட்டணங்களை ஈடுகட்டுவதற்குப் போதுமான நிதி மதிப்பைக் கொண்டிருக்கும்.<br><br>தொடர்ச்சியான பாலிசி கவரேஜை உறுதி செய்வதற்காக, ஆண்டுதோறும் உங்களுடன் பகிர்ந்து கொண்ட வருடாந்திர அறிக்கையில் உங்கள் பாலிசியின் நிலைத்தன்மையை தொடர்ந்து மதிப்பாய்வு செய்வதை நாங்கள் பரிந்துரைக்கிறோம். |

| **குறைந்தது 5 வருடத்திற்கு நீடித்திருக்கும் பாலிசி குறித்து அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்** | | |
|---|---|---|
| 12. | **மறு-விலையிடலுக்குப் பிறகு எனது பாலிசி எவ்வளவு காலம் நீடிக்கும்?** | எங்கள் மதிப்பிடப்பட்ட எதிர்கால ஃபண்டு மதிப்பின் அடிப்படையில் அடுத்த 5 ஆண்டுகளுக்கு உங்கள் பாலிசி நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.<br><br>பின்வரும் அனுமானங்களுடன் தேதியில் கிடைக்கும் விவரங்களின் அடிப்படையிலேயே உங்கள் முதலீட்டுடன் இணைக்கப்பட்ட பாலிசியின் மதிப்பிடப்பட்ட வருங்கால ஃபண்டு மதிப்பு அமைந்துள்ளது என்பதைக் கவனத்தில் கொள்ளவும்:<br>▪ உங்கள் தற்போதைய பிரீமியங்களுக்கு அவற்றின் தவணைத் தேதிக்குள் தொடர்ந்து பணம் செலுத்துவீர்கள்;<br>▪ எதிர்காலத்தில் பகுதியளவு / முன்கூட்டியே பணம் எடுக்க மாட்டீர்கள்;<br>▪ உங்கள் பாலிசியில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை (எ.கா. ரைடர்(களை) சேர்ப்பது அல்லது நீக்குவது மற்றும்/அல்லது உறுதியளிக்கப்பட்ட தொகையில் செய்யப்படும் மாற்றங்கள்); |

| | | |
|---|---|---|
| | | ▪ உங்கள் ஃபண்டு தேர்வில் எந்த மாற்றமும் இல்லை. இந்தக் கணக்கீடுகளில் உள்ள பிரீமியத்தின் ஒதுக்கீடானது தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஃபண்டின் அடிப்படையில் அமைந்துள்ளது;<br>▪ தேர்ந்தெடுக்கும் ஃபண்டுகளின் அடிப்படையில் சிறந்த மதிப்பீட்டு ஃபண்டு விகிதம் பயன்படுத்தப்படுகிறது. அவை குறுகிய காலத்தில் ஃபண்டின் அடிப்படைச் சொத்துக்களில் ஏற்றமாகவோ அல்லது இறக்கமாகவோ கூர்மையான மாற்றங்களைக் கொடுக்கக் கூடிய நிலையற்ற தன்மையையும் வெளிப்படுத்தாது;<br>▪ அடிப்படைச் சொத்துக்களின் செயல்திறனைப் பொறுத்து, யூனிட் ஃபண்டுகளின் மதிப்பு செலுத்தப்படும் பிறீமியம்களின் தொகையை விடக் குறையலாம் என்பதால் பிரீமியம் செலுத்துவது என்பது, பாலிசி நீடித்திருப்பதற்கான ஒரு உத்திரவாதம் கிடையாது;<br>▪ உண்மையான அனுபவத்தையும், பொருளாதாரக் கண்ணோட்டத்தையும் பொறுத்து, வருடா வருடம் மாறுபடக் கூடிய எதிர்கால விளைவுகளின் மதிப்பீடுகளின் அடிப்படையில் இந்தக் கணிப்பு அமைந்துள்ளது. உண்மையான அனுபவம் எங்களின் மதிப்பீடுகளிலிருந்து வேறுபடலாம் (எ.கா. சிறந்த அல்லது மோசமான உண்மையான முதலீட்டு செயல்திறன் காரணமாக), உங்களுடைய ஃபண்டு மதிப்பு எங்களது மதிப்பீட்டிற்கு முன்போ அல்லது அதற்குப் பின்னரோ பூஜ்ஜியத்திற்குக் குறையக்கூடும். |

| 5 வருடத்திற்குக் குறைவாக நீடிக்கும் பாலிசி குறித்து அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் | | |
|---|---|---|
| 13. | **மறு-விலையிடலுக்குப் பிறகு எனது பாலிசி பாதுகாப்பு எவ்வளவு காலம் நீடிக்கும்?** | எங்கள் மதிப்பிடப்பட்ட ஃபண்டு மதிப்பின் அடிப்படையில் ஒப்பந்த காலம் முடியும் வரை உங்கள் பாலிசி நீடிக்காது என்று எதிர்பார்க்கப்படுகிறது.<br><br>பின்வரும் அனுமானங்களுடன் தேதியில் கிடைக்கும் விவரங்களின் அடிப்படையிலேயே உங்கள் முதலீட்டுடன் இணைக்கப்பட்ட பாலிசியின் மதிப்பிடப்பட்ட வருங்கால மதிப்பு அமைந்துள்ளது என்பதைக் கவனத்தில் கொள்ளவும்:<br>▪ உங்கள் தற்போதைய பிரீமியங்களுக்கு அவற்றின் தவணைத் தேதிக்குள் தொடர்ந்து பணம் செலுத்துவீர்கள்;<br>▪ எதிர்காலத்தில் பகுதியளவு / முன்கூட்டியே பணம் எடுக்க மாட்டீர்கள்;<br>▪ உங்கள் பாலிசியில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை (எ.கா. ரைடர்(களை) சேர்ப்பது அல்லது நீக்குவது மற்றும்/அல்லது உறுதியளிக்கப்பட்ட தொகையில் செய்யப்படும் மாற்றங்கள்);<br>▪ உங்கள் ஃபண்டு தேர்வில் எந்த மாற்றமும் இல்லை. இந்தக் கணக்கீடுகளில் உள்ள பிரீமியத்தின் ஒதுக்கீடானது தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஃபண்டின் அடிப்படையில் அமைந்துள்ளது; |

| | | |
|---|---|---|
| | | ▪ தேர்ந்தெடுக்கும் ஃபண்டுகளின் அடிப்படையில் சிறந்த மதிப்பீட்டு ஃபண்டு விகிதம் பயன்படுத்தப்படுகிறது. அவை குறுகிய காலத்தில் ஃபண்டின் அடிப்படைச் சொத்துக்களில் ஏற்றமாகவோ அல்லது இறக்கமாகவோ கூர்மையான மாற்றங்களைக் கொடுக்கக் கூடிய நிலையற்ற தன்மையையும் வெளிப்படுத்தாது;<br>▪ அடிப்படைச் சொத்துக்களின் செயல்திறனைப் பொறுத்து, யூனிட் ஃபண்டுகளின் மதிப்பு செலுத்தப்படும் பிரீமியம்களின் தொகையை விடக் குறையலாம் என்பதால் பிரீமியம் செலுத்துவது என்பது, பாலிசி நீடித்திருப்பதற்கான ஒரு உத்திரவாதம் கிடையாது;<br>▪ இந்த நீடித்திருக்கும் சோதனை ஆண்டுதோறும் நடத்தப்படும். உண்மையான அனுபவத்தையும், பொருளாதாரக் கண்ணோட்டத்தையும் பொறுத்து, வருடா வருடம் மாறுபடக் கூடிய எதிர்கால விளைவுகளின் மதிப்பீடுகளின் அடிப்படையில் இந்தக் கணிப்பு அமைந்துள்ளது. உண்மையான அனுபவம் எங்களின் மதிப்பீடுகளிலிருந்து வேறுபடலாம் (எ.கா. சிறந்த அல்லது மோசமான உண்மையான முதலீட்டு செயல்திறன் காரணமாக), உங்களுடைய ஃபண்டு மதிப்பு எங்களது மதிப்பீட்டிற்கு முன்போ அல்லது அதற்குப் பின்னரோ பூஜ்ஜியத்திற்குக் குறையக்கூடும். |
| 14. | **திருத்தப்பட்ட பிரீமியத்தை என்னால் செலுத்த முடியவில்லை என்றால், எனக்கு இருக்கும் வாய்ப்புகள் என்ன?** | அதிகரித்து வரும் செலவுகள் அதிகரிப்பது நிதி நெருக்கடியை ஏற்படுத்தும் என்பதை நாங்கள் ஒப்புக் கொள்கிறோம், மேலும் சிறந்த வாய்ப்புகளைக் கண்டறிய உங்களுக்கு உதவுவதற்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். வாங்கும் தன்மை குறித்து உங்களுக்கு ஏதேனும் கவலைகள் இருந்தால், பின்வரும் விருப்பத் தேர்வுகளை நீங்கள் பரிசீலிக்கலாம்:<br><br>a) உங்களின் தற்போதைய காப்பீட்டு பிரீமியத்தை அதிகரிக்காமல் தற்போதைய கவரேஜைப் பராமரிப்பதை நீங்கள் தேர்வு செய்யலாம். ஆனாலும், உங்கள் பாலிசியின் ஃபண்டு மதிப்பானது, பின்வரும் ஆண்டுகளில் அதிகள் காப்பீட்டுக் கட்டணங்களை ஈடுகட்டும் அளவிற்குப் போதுமானதாக இல்லாமல் போகலாம், அதனால் உங்கள் பாலிசி காலாவதியாகலாம். அதனால், எங்கள் கடிதத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளவாறு உங்கள் தற்போதைய பிரீமியத்தை அதிகரிக்குமாறு நாங்கள் வலியுறுத்துகிறோம்; *அல்லது*<br><br>b) வாங்கும் திறன் ஒரு பிரச்சினையாக உள்ளது என்றால், உங்கள் மருத்துவத் திட்டம் மிகக் குறைந்த திட்ட நிலையில் இல்லை என்றால், அருகிலுள்ள ஜூரிச் கிளையில் ‘மாற்றுவதற்கான கோரிக்கைப் படிவத்தை’ பூர்த்தி செய்து சமர்ப்பிப்பதன் மூலம், குறைந்த கவரேஜ் கொண்ட மருத்துவத் திட்டத்திற்குத் தரமிறக்குவதை நீங்கள் தேர்வு செய்யலாம். ஆனாலும், உங்கள் மருத்துவக் காப்பீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு குறைந்த மருத்துவத் திட்டம் |

| | | |
|---|---|---|
| | | போதுமானதாக இருக்குமா என்பதை நீங்கள் மதிப்பாய்வு செய்ய வேண்டும்:<br><br>i. உங்கள் வெல்த் பிளானரைத் தொடர்பு கொள்ளுங்கள்; அல்லது<br>ii. 1-300-888-622 என்ற எண்ணில் ஜுரிச் அழைப்பு மையத்தைத் தொடர்புகொள்ளுங்கள் அல்லது callcentre@zurich.com,my என்ற முகவரியில் எங்களுக்கு மின்னஞ்சல் செய்யுங்கள்; அல்லது<br>iii. உங்கள் அருகாமையில் உள்ள ஜுரிச் கிளைக்குச் செல்லுங்கள்<br><br>c) ஜுரிச் லைஃப் இன்சூரன்ஸ் மலேசியா பெர்ஹத் வழங்கும் அதே போன்ற அல்லது மேலும் விரிவான மருத்துவக் காப்பீட்டை வழங்குகின்ற வேறு மருத்துவ ரைடர்களுக்கு நீங்கள் மாறிக் கொள்ளலாம். ஆனாலும், நிலையான எழுத்துறுதி செயல்முறை, விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பொருந்தும்.<br><br>d) உங்கள் பாலிசியின் கணக்கு மதிப்பை அதிகரிக்க, உங்கள் கவரேஜைக் குறைக்கவும் (உறுதியளிக்கப்பட்ட தொகையைக் குறைக்கவும் மற்றும்/அல்லது ரைடரை (களை) நீக்கவும் நீங்கள் தேர்வு செய்யலாம்<br><br>கவரேஜ் தொகை பாதிக்கப்படலாம் என்பதால், உங்கள் காப்பீட்டுப் பாலிசியில் நீங்கள் செய்ய விரும்பும் மாற்றங்களைப் பற்றி நீங்கள் புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.<br><br>இந்த செயல்முறையை சீராக மேற்கொள்வதில் உங்களுக்கு உதவுவதற்கு நாங்கள் இருக்கிறோம். மேலும் உதவிக்கு, நீங்கள் செய்யக் கூடியவை:<br>• உங்கள் வெல்த் பிளானரைத் தொடர்பு கொள்ளுங்கள்.<br>• 1-300-888-622 என்ற என்னை எங்கள் வாடிக்கையாளர் சேவையை அழையுங்கள்<br>• callcentre@zurich.com.my என்ற முகவரியில் எங்களுக்கு மின்னஞ்சல் செய்யுங்கள்<br><br>காப்பீட்டுத் தயாரிப்புகள் குறித்த விவரங்களுக்கு, zurich.com.my -க்குச் செல்லவும். |
| 15. | **பரிந்துரைக்கப்பட்ட தொகையைத் தவிர்த்து, வேறு தொகைக்கு எனது பிரீமியத்தை அதிகரிப்பதை நான் தேர்வு செய்யலாமா?** | தேர்வு செய்யலாம். ஆயினும், நீண்ட கால ஓட்டத்தில் அதிக காப்பீட்டுக் கட்டணங்களை ஈடு செய்வதற்குப் போதிய ஃபண்டு உங்கள் பிரீமியத்தில் இருப்பதற்காக, பரிந்துரைக்கப்பட்ட புதிய வழக்கமான பிரீமியத்தை செலுத்துவதையும், ஒற்றைப் பிரீமியம் டாப்-அப் செய்வதையும் (பொருந்தினால்) நாங்கள் வலியுறுத்திக் கூறுகிறோம்.<br><br>'மாற்றம் செய்வதற்கான கோரிக்கை படிவத்தை' (RCF) பூர்த்தி செய்து<br>i) அருகிலுள்ள ஜுரிச் கிளையில் சமர்ப்பியுங்கள் அல்லது |

| | | |
|---|---|---|
| | | ii) உங்கள் வெல்த் பிளானரைத் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது<br>iii) 1-300-888-622 என்ற எண்ணில் சூரிச் சேவை மையத்தைத் தொடர்புகொள்ளுங்கள் அல்லது CallCentre@zurich.com என்ற மின்னஞ்சல் முகவரியில் எங்களுக்கு மின்னஞ்சல் செய்யுங்கள் |

16.

**பரிந்துரைக்கப்படும் புதிய வழக்கமான பிரீமியம் மற்றும் ஒற்றைப் பிரீமியம் டாப்-அப் ஆகியவற்றை எவ்வாறு செலுத்துவது? அதற்கான நடைமுறை என்ன?**

இணைக்கப்பட்டுள்ள '**பதில் ஸ்லிப்பை**' பூர்த்தி செய்து, அதை எங்களுக்குத் திருப்பி அனுப்புவதன் மூலம், புதிய பிரீமியத்திற்கு நீங்கள் பணம் செலுத்தலாம். பூர்த்தி செய்யப்பட்ட படிவம் பதில் ஸ்லிப்பின் தேதிக்கேற்ப எங்களை வந்தடைய வேண்டும். இல்லையென்றால், திருத்தப்பட்ட பரிந்துரைக்கப்பட்ட புதிய பிரீமியம் மற்றும் ஒற்றை பிரீமியம் டாப்-அப்பை (பொருந்தினால்) பெறுவதற்கு, நீங்கள் உங்கள் வெல்த் பிளானரை அணுக வேண்டிய தேவை ஏற்படலாம்`

உங்கள் <u>பாலிசியின் அடுத்த பிரீமியம் தவணைத் தேதியிலிருந்து</u> புதிய பிரீமியம் நடைமுறைக்கு வரும்.

உங்கள் தற்போதைய பிரீமியம் பேமெண்ட் முறையைப் பொறுத்து, நாங்கள் புதிய தொகையை வசூலிப்பதற்கு உங்கள் வங்கியில் நீங்கள் சில கூடுதல் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியிருக்கும். மேலும் விவரங்களுக்கு, கீழே உள்ள அட்டவணையைப் பார்க்கவும்.

| **தற்போதைய பேமெண்ட் முறை** | **நான் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்?** |
|---|---|
| ரொக்கம்/ காசோலை | உங்கள் தற்போதைய பேமெண்ட் ஏற்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை.<br><br>உங்கள் கூடுதல் சௌகரியத்திற்காக, கிரெடிட்/டெபிட் கார்டுக்கு மாறுமாறு உங்களை அழைக்கிறோம். தயவுசெய்து விசா/மாஸ்டர்கார்டு ஆட்டோ டெபிட் படிவம் https://bit.ly/ZurichAutoDebit -ஐ பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்யப்பட்ட படிவத்தை எங்களுக்கு அனுப்பவும். |
| கிரெடிட் அல்லது டெபிட் கார்டு, ஆட்டோ-டெபிட் (பரிவர்த்தனை தொகை வரம்பு இல்லாமல்) | உங்கள் தற்போதைய பேமெண்ட் ஏற்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. |
| நேரடி டெபிட் இ-ஆணை (பரிவர்த்தனை தொகை வரம்புடன்) | இந்த இணைப்பில் நேரடி டெபிட் பதிவு செய்தலை நிறைவு செய்யவும்: பரிந்துரைக்கப்பட்ட புதிய பிரீமியம் தொகையை உங்கள் வங்கிக் கணக்கிலிருந்து கழிப்பதற்கு இது எங்களுக்குத் தேவையாகும்.<br><br>ஏற்கனவே பதிவு செய்தவர்களைப் பொறுத்த வரையில், உங்கள் வங்கிக் கணக்கு ஆட்டோ டெபிட் படிவத்தில் உள்ள அதிகபட்ச வரம்பானது பரிந்துரைக்கப்பட்ட புதிய பிரீமியத்தை விடக் குறைவாக இருந்தால், பின்வரும் வழிகளில் அதிகபட்ச வரம்பை நீங்கள் மாற்றலாம் |

| | | |
|---|---|---|
| | | 1) https://myzurichlife.com.my -இல் உள்ள எங்கள் வாடிக்கையாளர் போர்ட்டலில் உள்நுழையவும், அல்லது<br>2) அதிகபட்ச வரம்பை மாற்றுவதற்காக ஒரு புதிய படிவத்தை வங்கியில் சமர்ப்பிக்கவும். |
| | வங்கிகளில் நிலையான அறிவுறுத்தல்கள் | பரிந்துரைக்கப்பட்ட புதிய பிரீமியம் தொகையை எங்களிடம் செலுத்துவதற்கு, தற்போதுள்ள நிலையான அறிவுறுத்தலை (களை) புதுப்பிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளை உங்கள் வங்கியில் செய்யவும். |
| 17. | **பதில் ஸ்லிப்பை குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவிற்குள் நான் சமர்ப்பிக்கவில்லை என்றால் என்னவாகும்?** | பதில் ஸ்லிப்பைத் தாமதமாகச் சமர்ப்பித்தால், பரிந்துரைக்கப்பட்ட பிரீமியம் திருத்தப்படலாம். போதுமான கணக்கு மதிப்பு இல்லாததால் உங்கள் பாலிசி காலாவதியாகலாம்.<br><br>அதைத் தவிர்ப்பதற்கு, திருத்தப்பட்ட பிரீமியத்தை சரிசெய்வதற்கு கூடிய விரைவில் எங்களையோ அல்லது உங்கள் வெல்த் பிளானரையோ அணுகவும். |

| **BNM அறிமுகப்படுத்திய இடைக்கால நடவடிக்கைகள் குறித்து அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்** | | |
|---|---|---|
| 18. | **பேங்க் நெகாரா மலேசியா (BNM) மருத்துவத் திட்டங்களுக்காக அறிமுகப்படுத்திய இடைக்கால நடவடிக்கைகள் எவை?** | BNM அறிவித்த மருத்துவத் திட்டங்களுக்கான இடைக்கால நடவடிக்கைகள், உங்கள் பாலிசியின் மீது உடனடியாக ஏற்படும் நிதிசார் தாக்கத்தைக் குறைத்து, உங்கள் மருத்துவத் திட்டக் காப்பீட்டைப் பாதுகாக்க உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.<br><br>அந்த நடவடிக்கைகளில் அடங்கியவை:<br>• காப்பீட்டுக் கட்டணங்கள்/பிரீமியங்களில் மேற்கொள்ளப்படும் அதிகரிப்பை குறைந்தது மூன்று ஆண்டுகளுக்குப் பிரித்தல்.<br>• தகுதியுள்ள பாலிசிதாரர்களுக்கு பாலிசி ஆண்டு நிறைவிலிருந்து ஒரு வருட ஒத்திவைப்பு காலத்தை (மருத்துவ கிளைம்களின் பணவீக்கம் காரணமாக காப்பீட்டுக் கட்டணத்தையும், பிரீமியத்தையும் சரிசெய்வதில் தற்காலிக இடைநிறுத்தம்) வழங்குதல்.<br>• 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முந்தைய மருத்துவத் திட்ட மறுவிலையிடலின் காரணமாக, தங்கள் பாலிசிகளை ஒப்படைத்த அல்லது காலாவதியான பாலிசிதாரர்களின் காப்பீட்டை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வர அனுமதித்தல்.<br>• மாற்று மருத்துவ மற்றும் சுகாதார காப்பீடு/தக்காஃபுல் (MHIT) காப்பீட்டுத் தயாரிப்பை வழங்குதல்.<br>• பாலிசிதாரர்களுக்கு உதவுவதற்காக ஒரு பிரத்யேக உதவி ஹாட்லைனை அமைத்தல்.<br><br>ஜனவரி 1, 2025 முதல் இந்த இடைக்கால நடவடிக்கைகள் நடைமுறைக்கு வரும். |
| 19. | **இந்த இடைக்கால நடவடிக்கைகளால் எனது மருத்துவத் திட்டம் எவ்வாறு பாதிக்கப்படும்?** | உங்கள் காப்பீட்டுக் கட்டணங்களில் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் உங்களுக்குக் கவலையளிக்கக் கூடும் என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம். இந்தச் சுமையைக் குறைப்பதற்காக, அதிகரிக்கப்படும் தொகை அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குப் பிரிக்கப்படும். |

| | | |
|---|---|---|
| | | நீங்கள் 60 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருந்து, மிகக் குறைவான திட்டத்தில் சேர்ந்திருந்தால், எந்தவொரு அதிகரிப்பும் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு ஒரு வருட ஒத்திவைப்பைப் பெற உங்களுக்கு உரிமை உள்ளது. அதனால் இதை ஈடு செய்ய உங்களுக்கு அதிக காலம் கிடைக்கும். |
| 20. | **ஒரு வருட ஒத்திவைப்பு காலத்தைப் பெறுவதற்கு நான் தகுதிபெறுகிறேனா?** | ஜனவரி 1, 2025 முதல் நடைமுறைக்கு வரும் ஒரு வருட ஒத்திவைப்பு காலத்தைப் பெறுவதற்கு தகுதி பெற, நீங்கள் குறைந்தபட்சம் 60 வயதுடையவராகவும், மிகக் குறைவான மருத்துவத் திட்டத்தில் சேர்ந்தவராகவும் இருக்க வேண்டும்.<br><br>இந்த நடவடிக்கை மிகவும் பாதிக்கப்படக்கூடிய வாடிக்கையாளர்களைப் பாதுகாப்பதற்காக விசேஷமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் முக்கியமாகக் காப்பீடு தேவைப்படுபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது.<br><br>நீங்கள் மிகக் குறைவான மருத்துவத் திட்டத்தில் சேரவில்லை என்றால், ஒத்திவைப்பு காலத்தைப் பெறுவதற்குத் தகுதி பெற உங்கள் திட்டத்தை தரவிறக்கம் செய்யலாம். |
| 21. | **மறுவிலையிடல் சரிசெய்தல்கள் உத்தரவாதம் அளிக்கப்பட்டவையா மற்றும் நிலையானவையா?** | உங்கள் நிதிசார் பாதுகாப்பு முக்கியமானது, நீடித்த தன்மையைப் பராமரிப்பதற்கு நாங்கள் பாடுபடும் வேளையிலும் கூட, எதிர்கால மதிப்பாய்வுகள் அவசியமானவையாக இருக்கலாம்.<br><br>நடைமுறைப்படுத்த வேண்டிய பல்வேறு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் செயல்திறனைப் பொறுத்து, நான்காவது ஆண்டு முதல் மேற்கொள்ளப்படும் மறுவிலையிடல் சரிசெய்தல்கள் மதிப்பாய்விற்கும், திருத்தத்திற்கும் உட்பட்டவயாகும். |
| 22. | **இந்த மெதுவான அதிகரிப்புகள் அனைத்து வகையான காப்பீட்டுக் கட்டணம் அல்லது பிரீமியம் சரிசெய்தல்களுக்கும் பொருந்துமா?** | இல்லை, BNM அறிமுகப்படுத்திய இடைக்கால நடவடிக்கைகள் மருத்துவ மறுவிலையிடல் சரிசெய்தல்களுக்கு மட்டுமே பொருந்தும். உங்கள் பாலிசியின் நிலைத்தன்மையைப் பாதிக்கக் கூடிய பிற காரணிகளான அதிக வயது வரம்புக்கு முன்னேறுதல், மோசமான ஃபண்டு செயல்திறன், பகுதியளவு பணத்தைத் திரும்பப் பெறுதல் மற்றும் பிரீமியம் விடுமுறைகள் போன்ற அதிகரிப்புகளுக்கு அவை பொருந்தாது. |
| 23. | **இந்த இடைக்கால நடவடிக்கைகளின் கீழ் எவ்வாறு எனது காப்பீட்டுக் கட்டணம் நீடித்திருக்கும், மேலும் அவை எவ்வாறு நீண்ட காலத்திற்கு எனது பிரீமியங்களை பாதிக்கும்?** | நீடித்த நிதிசார் எதிர்காலம் முக்கியமானது, ஏதேனும் மாற்றங்களைச் சமாளிக்க உங்களுக்கு உதவ நாங்கள் இருக்கிறோம். காப்பீட்டுக் கட்டணங்களில் மேற்கொள்ளப்படும் இந்த தாமதமான அதிகரிப்பு உடனடி நிவாரணத்தை அளிக்கும் அதே வேளையில், சுகாதாரப் பாதுகாப்புத் துறை முழுவதும் முறைசார் மாற்றங்களை நடைமுறைப்படுத்தவில்லை என்றால், மிக விரைவிலேயே குறிப்பிடத்தக்க சரிசெய்தல்களை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்படலாம்.<br><br>தொடர்ச்சியான காப்பீட்டுப் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு, நாங்கள் வழங்கும் அறிக்கையைப் பயன்படுத்தி உங்கள் பாலிசியின் நீடித்ததன்மையை ஆண்டுதோறும் மதிப்பாய்வு செய்யுமாறு நாங்கள் கண்டிப்பாக அறிவுறுத்துகிறோம். |

ZURICH